**பப்பாளி மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் விநியோகம்**

First Published : 07 Jul 2011 12:27:40 PM IST

பெரம்பலூர், ஜூலை 6: ஆத்மா திட்டத்தின் கீழ் பப்பாளி மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஒட்டுண்ணிகள் விநியோகம் செய்யப்படுகிறது என்றார் அந்த மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். இரா.மாரிமுத்து.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திகுறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக மாவுப்பூச்சியானது பல பயிர்களை தாக்கியுள்ளது.

குறிப்பாக, மரவள்ளிப் பயிர்களில் அதிகளவில் தாக்கியிருப்பது வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள் மேற்கொண்ட வயல்வெளி ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த மாவுப்பூச்சிகளானது மரவள்ளியின் இலைகள், தண்டுப்பகுதிகளில் வெண்மை நிறத்தில் ஒட்டிக்கொண்டு காணப்படும். மேலும், வயல்களில் ஆங்காங்கே பரவலாக தென்பட்டு, வயல் முழுவதும் பரவும் தன்மை கொண்டவை.

இந்தப்பூச்சியானது, அதிகளவில் மரவள்ளியின் அடி இலைகளை தாக்கி, சாற்றை உறிஞ்சுவதால், இலைகள் உதிர்ந்து விடுவதோடு, இலைகளின் மீது தேன் போன்ற திரவத்தினை சுரந்து கரும்படல நோய் ஏற்படுத்தி ஒளிச்சேர்க்கை நடைபெற விடாமல் தடுக்கின்றன.

மரவள்ளியில் ஏற்பட்டுள்ள மாவுப்பூச்சி தாக்குதலை கருத்தில் கொண்டு, பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் (ஆத்மா) நிதியுதவியுடன், வேளாண்மை இணை இயக்குநர் பரிந்துரைப்படி, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ஒட்டுண்ணிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஒட்டுண்ணிகள் ஏற்கெனவே விடப்பட்ட மரவள்ளி வயல்களில், மாவுப்பூச்சியின் தாக்குதல் குறைந்து காணப்படுகிறது. ஒட்டுண்ணிகள் வெளியிடாத வயல்களில் தாக்குதல் அதிகமாக காணப்படுகிறது. மரவள்ளி விவசாயிகள், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை அணுகி, மாவுப்பூச்சி ஒட்டுண்ணிகளை வாங்கி பயன்பெற்று வருகின்றனர். இந்த ஒட்டுண்ணிகளானது, காலை அல்லது மாலை வேளைகளில் வயல்களில் இடவேண்டும்.

விவசாயிகள் பயன்பெறும் நோக்கத்தில், ஒட்டுண்ணிகள் மாலை வேளைகளில் வழங்கப்படுகிறது.

எனவே, பப்பாளி மாவுப்பூச்சி ஒட்டுண்ணிகள் தேவைப்படும் விவசாயிகள் தங்களது வயலில் மாவுப்பூச்சி தாக்கிய இலைகளுடன், மாலை வேளைகளில், ரோவர் வேளாண் அறிவியல் உள்ள 04328-293251, 293592 உள்ளிட்ட எண்களிலும், தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு) சி. சங்கரை 94438 07381 என்ற எண்ணிலும், முதுநிலை ஆராய்ச்சியாளர் பி.சரவணனனை 99442 44532 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர்.

**"இயற்கைச் சூழலுக்கேற்ப விவசாயம் செய்ய வேண்டும்'**

First Published : 07 Jul 2011 01:07:41 PM IST

மன்னார்குடி ,ஜூலை 6: தடை செய்யப்பட்ட விதை, ரசாயன உரம் இவற்றைவிட இயற்கைச் சூழலை ஆழ்ந்து புரிந்துகொண்டு, அதற்கேற்ற வகையில் விவசாயம் செய்ய வேண்டும் என்றார் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார்.

மன்னார்குடியில் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் (இந்திய கம்யூனிஸ்ட் சார்பு) வைர விழாவில் கலந்து கொண்டு அவர் மேலும் பேசியது:

உலக அளவில் தொழில்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு, சுற்றுச்சுழல் மாசு, விவசாயத்தில் அதிக அளவில் ரசாயன உரங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றால் நிலநடுக்கம், பூகம்பம், வறட்சி போன்ற பேரழிவுகள் ஏற்படுகின்றன. இதனால், மனிதன் உணவுக்கு ஆகும் செலவைவிட அவனின் மருத்துவத்திற்கு அதிகமாகச் செலவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் 70 சதக் கிராமங்களும், 60 சதம் உழவர்களும் உள்ளனர். இவர்களைப் பற்றி கவலை கொள்ளும் அரசுகள் மத்தியில் ஆட்சிக்கு வருவது இல்லை என்பதுதான் வேதனை.

தமிழகத்தில் கடந்த திமுக ஆட்சியில் விவசாயிகள் எந்தவகை தானிய விதைகளையும் கையிருப்பில் வைத்திருக்கக் கூடாது என்ற நோக்கில், தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், மாநில உழவர் மன்றச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். விவசாயிகள், சமூக ஆர்வலர்களின் எதிர்ப்பால் தாற்காலிகமாக அதை நிறுத்தி வைத்தனர். அதிமுக அரசு முழுமையாக அதை ரத்து செய்ய வேண்டும்.

வேளாண்மை மாநிலப் பட்டியலில் உள்ளதைக் காரணம் காட்டி கேரளம், ஆந்திரம் உள்ளிட்ட மாநிலங்கள் மத்திய அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில்லை. அதேபோல, தமிழக அரசும் மக்கள் மத்தியில் விவாதித்து தீர்வு பெற்ற பிறகு, புதிய வேளாண்மைச் சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார் நம்மாழ்வார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு பேசியது: சீனிவாசராவ், ஜீவானந்தம் போன்ற பொதுவுடைமை தலைவர்களால் தொடங்கப்பட்டதுதான் விவசாயிகள் சங்கம். இந்தியா சுதந்திரம் பெற்று 64 ஆண்டுகள் கடந்த

நிலையிலும், வேளாண்மைத் துறையில் பின்தங்கிய நிலையில் உள்ளோம். வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யமாட்டோம் என்பது ஆட்சியாளர்களின் கொள்கையாக இருக்க வேண்டும். தேவையான அளவு உணவு தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ஏழை, எளிய விவசாயிகளை காக்க மத்திய அரசு தவறி விட்டது. இதை உணர்த்தும் வகையில், நமது சங்கத்தின் போராட்டங்கள் அமையும் என்றார் நல்லகண்ணு.

கூட்டத்திற்கு விவசாய சங்க மாவட்டத் தலைவர் பி.எஸ். மாசிலாமணி தலைமை வகித்தார்.


சிறப்பு அழைப்பாளராக சங்கத்தின் அகில இந்திய துணைத் தலைவர் கொள்ளி நகேஸ்வரராவ் கலந்து கொண்டார்.

இதில் சங்கத்தின் மாநிலத் தலைவரும், சிவகங்கை தொகுதி எம்.எல்.ஏ.வுமான எஸ். குணசேகரன், மாநில பொதுச் செயலர் வே. துரைமாணிக்கம், திருத்துறைப்பூண்டி தொகுதி எம்.எல்.ஏ. கே. உலகநாதன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் வை.சிவபுண்ணியம், பி. பத்மாவதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் வெ. வீரசேனன், துணைச் செயலர் வை. செல்வராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக, சங்கத்தின் கோட்டூர் ஒன்றியத் தலைவர் பி.ஆர். பாண்டியன் வரவேற்றார். மன்னார்குடி ஒன்றியத் தலைவர் ஆர். வீரமணி நன்றி கூறினார்.

தினமலர்

**உணவுப் பொருள் பணவீக்கம் 7.61 சதவீதமாக குறைந்தது**

ஜூலை 08,2011,01:47




புதுடில்லி : நாட்டின், உணவுப் பொருள் பணவீக்கம் ஜூன் 25ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 7.61 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 7.78 சதவீதமாக இருந்தது. கடந்த இரண்டு வாரங்களாக உணவுப் பொருள் பணவீக்கம் குறைந்து வருகிறது. கடந்த

2010ம் ஆண்டு, ஜூன் மாதத்தின், இதே வாரத்தில், இது, 20 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்து காணப்பட்டது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள், காய்கறிகள், உருளைக்கிழங்கு போன்றவற்றின் விலை மிகவும் குறைந்து காணப்பட்டது. ஆண்டுக்கணக்கில் ஒப்பிடும் போது, இவ்வாரத்தில், பருப்பு வகைகள் விலை 9 சதவீதமும், காய்கறிகள் விலை 8.74 சதவீதமும் குறைந்திருந்தது. குறிப்பாக, உருளைக்கிழங்கின் விலை, 2.13 சதவீதம் குறைந்திருந்தது.

இருப்பினும், பழங்கள் (22.75 சதவீதம்), வெங்காயம் (21.24 சதவீதம்), முட்டை, இறைச்சி மற்றும் மீன்கள் (10.12 சதவீதம்), உணவு தானியங்கள் (4.26 சதவீதம்), பால் (12.10 சதவீதம்) ஆகியவற்றின் விலை, ஆண்டுக்கணக்கில் மிகவும் அதிகரித்திருந்தது. உணவு சாராத பொருள்களுக்கான பணவீக்கம், 17.91 சதவீதத்திலிருந்து, 17.69 சதவீதமாக குறைந்துள்ளது.

உணவு சாராத பொருள்கள் பிரிவின் கீழ், ஆண்டுக்கணக்கில், நூலிழை விலை 38.05 சதவீதம் என்ற அளவிலும், தாதுப் பொருள்கள் விலை, 27.87 சதவீதம் என்ற அளவிலும் உயர்ந்திருந்தது. கடந்த 2010ம் ஆண்டின் பெரும்பாலான மாதங்களில், உணவுப் பொருள் பணவீக்கம், இரட்டை இலக்கத்திலேயே இருந்தது. இந்நிலையில், நடப்பாண்டு மார்ச் மாதத்தில் இருந்து, உணவுப் பொருள் பணவீக்கம் குறைந்து வருகிறது.

இருப்பினும், மத்திய அரசு, ஜூன் 24ம் தேதி, டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றின் விலையை உயர்த்தியது. இதனால், கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், இதன் தாக்கம் இல்லை. இதனையடுத்த வாரத்தில், இவற்றின் விலை உயர்வால் ஏற்பட்ட பாதிப்பு தெரியவரும்.

நடப்பு ஆண்டு, ஜனவரி முதல் மார்ச் வரையிலான முதல் காலாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8 சதவீதமாக இருந்தது. இது, கடந்த ஐந்து காலாண்டுகளில் இல்லாத குறைந்த அளவாகும். சென்ற ஏப்ரல் மாதத்தில், தொழில்துறை உற்பத்தி 6.3 சதவீதமாக குறைந்திருந்தது. உணவுப் பொருள் பணவீக்கம் குறைந்துள்ள நிலையிலும், ஒட்டு மொத்த பணவீக்க உயர்வு கவலையளிப்பதாக உள்ளது என்று, மத்திய நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி தெரிவித்துள்ளார்.

**நிலக்கடலை மகசூல் அதிகரிக்க யோசனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2011,03:18 IST

ராசிபுரம்:"நிலக்கடலையில் ஜிப்சம் இட்டு மண்ணை அணைத்தால், திரட்சியான பொக்கு இல்லாத காய்கள் கிடைக்கும்' என, நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் இளங்கோ தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், 800 ஹெக்டேர் பரப்பளவில் மானாவாரி நிலக்கடலை பயிர் விழுது இறங்கும் பருவத்தில் உள்ளது. தற்போது, மழை பெய்து நல்ல ஈரம் இருப்பதால், ஒரு ஏக்கருக்கு, 80 கிலோ ஜிப்சம் இட்டு மண்ணை அணைக்க வேண்டும். அதனால், திரட்சியான பொக்கு இல்லாத காய்கள் கிடைப்பதுடன் கூடுதல் மகசூல் கிடைக்கும். மேலும், நிலக்கடலையில் சுருள் பூச்சி தாக்குதல் தென்படுகிறது. எனவே, ஏக்கருக்கு, 300 மில்லி மானோகுரோட்டோபாஸ், குயினல்பாஸ் அல்லது ஜோலோன், 350 மில்லி இதில் ஏதேனும் ஒரு மருந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சேலத்துக்கு காய்கறி வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2011,03:11 IST

சேலம்: சேலம் புறநகர் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளதால், விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.சேலம் மாநகருக்கு தேவையான காய்கறிகள் மல்லூர், பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, தாரமங்கலம், மேச்சேரி, ஓமலூர் ஆகிய இடங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. குளிர் பிரதேசங்களில் விளையும் கேரட், பீன்ஸ், பீட்ரூட் ஆகிய காய்கறிகள் ஊட்டி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைப் பிரதேசங்களில் இருந்தும் பெங்களூருவில் இருந்தும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.சேலம் மாவட்டத்தின் புறநகர் பகுதியில் இருந்தும், பெங்களூரு உள்ளிட்ட குளிர் பிரதேசங்களில் இருந்தும், சேலத்துக்கு காய்கறிகளின் வரத்து திடீரென உயர்ந்துள்ளது. இதனால், சேலத்தில் உள்ளூர், வெளியூர் காய்கறிகளின் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது.கடந்த மாதம் கிலோ, 22 ரூபாய்க்கு விற்கப்பட்ட உருளைக்கிழங்கு நேற்று, 18 ரூபாய்க்கும், 18 ரூபாய்க்கு விற்ற கேரட், 12 ரூபாய்க்கும் விற்கிறது. பீன்ஸ், 46 ரூபாய்க்கு விற்றது 16 ரூபாய்க்கும், 12 ரூபாய்க்கு விற்ற முட்டைக் கோஸ் ஒன்பது ரூபாய்க்கும், பீட்ரூட் கிலோ, 16 ரூபாய்க்கு விற்றது, 13 ரூபாய்க்கும், 12 ரூபாய்க்கு விற்ற நூல் கோல், 10 ரூபாய்க்கும் விற்கிறது. வெளியூர் காய்கறிகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதை அடுத்து உள்ளூர் காய்கறிகளின் விலையும் சரிந்துள்ளது.கத்திரிக்காய்

கிலோ, 16 ரூபாய்க்கு விற்றது, 14 ரூபாய்க்கும், 13 ரூபாய்க்கு விற்ற நாட்டுத் தக்காளி, 11 ரூபாய்க்கும், 15 ரூபாய்க்கு விற்ற பாகற்காய், 12 ரூபாய்க்கும் விற்கிறது. கிலோ, 24 ரூபாய்க்கு விற்ற சின்ன வெங்காயம், 22 ரூபாய்க்கு விற்கிறது. கிலோ, 12 ரூபாய்க்கு விற்ற புடலங்காய், 10 ரூபாய்க்கு விற்கிறது.காய்கறிகளின் விலையில் ஏற்பட்டுள்ள சரிவு பெண்கள், ஹோட்டல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதே நேரத்தில் காய்கறிகளின் விலை சரிவு விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

சேலம் காய்கறி வியாபாரி தங்கவேல் கூறியதாவது:சேலம் மாவட்டத்தின் புறநகர் மற்றும் வெளியூரில் இருந்து காய்கறிகள் வரத்து அதிகரித்துள்ளது. வரத்து அதிகரித்துள்ள நிலையில் விற்பனை, 50 சதவீதம் குறைந்துள்ளது. அனைத்து வகையான காய்கறிகளும், கிலோவுக்கு மூன்று முதல் அதிக பட்சம் எட்டு ரூபாய் வரை விலை சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த சரிவு இம்மாதம் முழுவதும் தொடரும். ஆடி மாதம் பிறக்கும் நிலையில், மீண்டும் காய்கறிகளின் விலையில் உயர்வு ஏற்படும். இவ்வாறு அவர் கூறினார்.பெரிய வெங்காயம் விலை கிடு கிடுசேலத்தில் அனைத்து வகையான காய்கறிகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், பெரிய வெங்காயம், காலி ஃபிளவர் ஆகியவை திடீரென உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோ, 12 ரூபாய்க்கு விற்ற பெரிய வெங்காயம், நான்கு ரூபாய் அதிகரித்து, 16 ரூபாய்க்கு விற்கிறது. காலி ஃபிளவர் ஒன்று, 10 ரூபாய்க்கு விற்றது, இருமடங்காக விலை அதிகரித்து, 20 ரூபாய்க்கு விற்கிறது. காலி ஃபிளவர் விலை உயர்வு, மாலை நேர சில்லி கடை உரிமையாளர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**தேங்காய் விற்பனைக்கு ஏலம்மாவட்ட கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2011,03:08 IST

நாமக்கல்: "தேங்காய் விற்பனையில், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது' என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:நாக்கல் மாவட்டத்தில், 16 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.அதிலிருந்து கிடைக்கும் தேங்காய் பல்வேறு கமிஷன் மண்டிகள் மூலம், விற்பனை செய்யப்படுகிறது. தேங்காய் விற்பனையில், விசாயிகள் கூடுதல் லாபம் பெற மாவட்ட நிர்வாகம் மூலம் பல்வேறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கபிலர்மலை வட்டாரத்தில் செயல்பட்டு வரும் சோழசிராமணி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், டெண்டர் முறையில் தேங்காய்களை விற்பனை செய்து, அதிகபட்ச விலை பெற

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.சோழசிராமணி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மூலம், ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை இரவு 8 மணியளவில், தேங்காய் ஏலம் நடக்கும். தேங்காய் விற்பனை செய்யும் விவசாயிகள், ஏல விற்பனையில் பங்கேற்று பயனடையலாம்.அந்த நடைமுறை, 13ம் தேதி முதல் செயல்படத் துவங்கும். தேங்காய் பருப்பாக எடுத்து விற்பனை செய்யும் விவசாயிகளுக்காக, ப.வேலூர் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தின் மூலம், ஒவ்வொரு வாரம் வியாழக்கிழமை ஏலம் நடத்தப்படுகிறது. இந்நடைமுறை, 14ம் தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ளது. எனவே, தேங்காய் பருப்புகளை விவசாயிகள் எடுத்து வந்து விற்பனை செய்யலாம்.விவசாயிகள், தேங்காயாகவோ அல்லது பருப்பாகவோ விற்பனை செய்யும்போது, அதிக பட்ச விலை பெற்று பயனடையலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தாவரக் கழிவில் செயற்கை விறகு: வேளாண் பல்கலை கண்டுபிடிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2011,00:38 IST

மரத்தூளுக்கு பதிலாக வீணாகும் தாவரக் கழிவுகளை பயன்படுத்தி செயற்கை விறகுகளான எரிகட்டிகள் தயாரிக்கும் தொழில்நுட்பம் கோவை, வேளாண் பல்கலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பசுமையை காப்பதுடன், விவசாயிகள், வேலையில்லா பட்டதாரிகள் உட்பட பலரும் வேலை வாய்ப்பு பெறக்கூடிய வாய்ப்புள்ளது. தற்போது வணிகரீதியாக நடைமுறையில் உள்ள, "பிரக்கெட்ஸ்' என்ற எரிக்கட்டிகள் (செயற்கை விறகுகள்) மரத்தூளை மூலப்பொருளாக கொண்டு தயாரிக்கப்படுகின்றன. மரத்தூளின் விலை உயர்வால், தயாரிப்புச் செலவை சமாளிக்க முடியாமல், எரிகட்டிகளின் விலையும் அதிகரிக்கிறது.

அதேவேளையில், எரிபொருள் தேவைக்காக மரங்கள் வெட்டப்படுவதால், பசுமை பாதிக்கப்படுகிறது; புவி வெப் பமயமாதல் போன்ற பிரச்னைகள் தலைதூக்கியுள்ளன. இதுபோன்ற சூழலில் வேளாண் கழிவுப் பொருட்களில் இருந்து எரிகட்டிகளை தயாரிக்கும் தொழில்நுட்பம், கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. துவரை, கத்தரி, பருத்தி மற்றும் மிளகாய் மார்கள் (அறுவடைக்கு பின் வீணாகக்கூடிய, அழிக்கப்படும் செடிகள் "மார்' எனப்படுகின்றன) நெல் உமி, கடலை தொல்லி, கரும்புச்சக்கை, தேங்காய் மட்டை போன்றவற்றை பவுடராக மாற்றி, எரிகட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

வேளாண் பல்கலை உயிர் ஆற்றல் துறை தலைவர் வெங்கடாசலம் கூறியதாவது: நிலக்கரிக்கு அடுத்து இந்த, "பிரக்கெட்ஸ்' என்ற செயற்கை விறகுகள் அதிக வெப்பத்திறன் கொண்டுள்ளன. மரத்தூளின் விலை அதிகரித்து வருவதால், எரிகட்டிகளை தயாரிக்க மாற்று வழி தேட வேண்டும். பெட்ரோலிய பொருட்களும் குறிப்பிட்ட அளவு மட்டுமே தற்போது இருப்பு உள்ளன. எனவே,

கட்டாயமாக மாற்றுப்பொருளை கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. அறுவடைக்கு பின் ஏராளமான செடிகள் வீணாகின்றன. அவற்றை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்ற வேண்டும். எனவே, மரத்தூளுக்கு பதிலாக ஈரப்பதம் அதிகமில்லாத, சாம்பல் சத்துள்ள குறிப்பிட்ட செடிகளை பயன்படுத்தி, எரிகட்டி தயாரிக்க கடந்த மூன்றாண்டுகளாக ஆராய்ச்சி நடந்தது.

தற்போது ஆராய்ச்சி முடிவடைந்த நிலையில், வேளாண் கழிவு பொருட்கள் எரிகட்டியாக மாற்றப்படுகின்றன. இவை ஒரே சீராக இருப்பதால், சாதாரண விறகுகளை விட எரிதிறன் பலமடங்கு அதிகமாக உள்ளது. தேயிலை நிறுவனங்கள், பெட்ரோலிய பொருட்களை பயன்படுத்தும் இன்ஜினியரிங் நிறுவனங்கள் மர விறகுகளுக்கு மாற்றாக இதை பயன்படுத்தலாம். இதன் விலையும் குறைவு. மரவிறகுகள் பற்றாக்குறை, நிலக்கரியால் சுற்றுச்சூழல் மாசடைதல் போன்ற காரணங்களால் எரிகட்டிகளுக்கு வரவேற்பு அதிகரித்துள்ளது.

நெதர்லாந்து, பிரான்ஸ், ஸ்வீடன் போன்ற ஐரோப்பிய நாடுகளில், இதற்கு மவுசு அதிகம். எனவே, ஏற்றுமதி வாய்ப்பும் பிரகாசமாக உள்ளது. குறைந்தபட்சமாக ஆறு லட்சம் முதல் 15 லட்சம் ரூபாய்க்குள் இதற்கான தயாரிப்புக் களத்தை அமைக்கலாம். ஒரு மணி நேரத்தில் 500 கிலோ எரிகட்டிகள் வரை தயாரிக்கலாம்; கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை விலை கிடைக்கிறது. பல இடங்களில் விவசாய கழிவுகள் எரிக்கப்பட்டும், குழியில் கொட்டியும் அகற்றப்படுகின்றன. அதற்கு பதிலாக எரிக்கட்டிகளாக மாற்றினால் பலன் கிடைக்கும். வேலையில்லா பட்டதாரிகள் கிராமப்பகுதிகளில் எரிகட்டி தயாரிப்பு தொழிற்சாலைகளை அமைத்து, சுயதொழில் செய்யலாம். விவசாயிகளுக்கும் கணிசமான வருமானம் கிடைக்கும். அந்தந்த சீசனுக்கேற்ப செடிகளை பயன்படுத்தலாம். சுற்றுச்சூழலும் மாசடையாது. இயற்கை மரங்களின் தேவை குறைவதால் பசுமைக்கு பாதிப்பிருக்காது. எனவே, தொழில்நுட்பம் குறித்து தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாறு, வெங்கடாசலம் தெரிவித்தார்.

எரிகட்டி தயாரிப்பது எப்படி? : எரிகட்டிகளை தயாரிப்பதில் இரண்டு வகை தொழில்நுட்பங்கள் இருப்பினும், இந்தியாவில் உந்து தண்டு தொழில்நுட்பமே அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இதேமுறையில் தான், கோவை வேளாண் பல்கலையிலும் விவசாய கழிகளை பயன்படுத்தி, எரிகட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. குறைந்தபட்சமாக, 10 சதவீத ஈரப்பசை மட்டுமே செடிக் கழிவுகளில் இருக்க வேண்டும். முதல் நிலையில் சேகரிக்கப்படும் செடிகளின் கழிவுகளில் உள்ள ஈரப்பசை, சோலார் கூடார உலர்த்தி மூலமாக நீக்கப்படுகிறது; இதற்கு ஒரு நாளாகும். பின், இயந்திரம் மூலம் "பவுடர்' ஆக மாற்றப்படுகிறது.

இந்த துகள்கள் குறிப்பிட்ட வெப்பநிலையில் உந்து தண்டு மூலமாக அதிக விசையுடன் அழுத்தப்படும்போது, கட்டிகளாக மாறி வெளியேறுகின்றன. உந்து தண்டு இயந்திரத்தில் இருந்து வெளியேறும் ஒரு சில வினாடிகளிலேயே எரிகட்டிகள் கெட்டித்தன்மையை அடைகின்றன. இவை குறைந்தபட்சமாக 30 மி.மீ., முதல் 90 மி.மீ., வரை அகலம் கொண்டவை. காய்ந்த செடிகள் முழுமையாக பவுடராக மாற்றி, கட்டிகளாக மாற்றப்படுவதால் எடையும் மாறுவதில்லை. செடிக் கழிவுகளின் எடை அளவுக்கேற்ப கட்டிகளின் எடையும் இருக்கும்.-நமது நிருபர்-

**மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம் : இணை இயக்குனருக்கு கண்டனம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2011,01:02 IST

ஊட்டி : தோட்ட கலைத்துறை இணை இயக்குனரை கண்டித்து, நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. நீலகிரியில் தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் மாற்று பயிர் திட்டமாக அ.தி.மு.க., அரசு சார்பில் மலர் சாகுபடி அறிமுகப்படுத்தப்பட்டது. நீலகிரியில் 500க்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் மலர் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். பருவ நிலை மற்றும் சந்தை படுத்ததில் சிக்கல் நிலவுவதால் மலர் சாகுபடியில் நஷ்டம் ஏற்பட்டு வருவதாக சாகுபடியாளர்கள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர். மேலும் மலர் சாகுபடிக்காக பெறப்பட்ட வங்கி கடனை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் தங்களது வங்கி கடனை ரத்து செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

இது ஒரு புறம் இருக்க, ஊட்டி வட்டார மலர் சாகுபடியாளர்கள் என்ற பெயரில் புதிதாக துவக்கப்பட்ட ஒரு சங்கம் "மலர் சாகுபடியில் தாங்கள் லாபம் ஈட்டி வருவதாகவும், மலர் சாகுபடி திட்டத்தை ரத்து செய்ய கூடாது,' என மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளித்து வருகிறது. இந்நிலையில், மலர் சாகுபடியாளர்களின் மனுக்கள் தோட்ட கலைத்துறை இணை இயக்குநருக்கு அனுப்பட்டுள்ளது. இதற்கு பதிலளித்த தோட்ட கலைத்துறை இணை இயக்குனர் ஆல்துரை, "விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது வருத்தமளிக்கிறது.

இதற்கு தோட்ட கலைத்துறை என்ன செய்து என்று தெரியவில்லை. தற்கொலைக்கு முயற்சிக்கும் விவசாயிகளுக்கு உளவியல் ரீதியாக மருத்துவம் மேற்கொள்ள பரிந்துரை செய்யும்,' என பதிலளித்துள்ளார். " பிரச்னைக்கு தீர்வு காண வேண்டிய தோட்ட கலைத்துறை இணை இயக்குனரின் இந்த பதில், விவசாயிகளை கேவலப்படுத்துவதாக உள்ளது,' எனக்கூறி, நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று ஊட்டி கலெக்டர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கம் தலைவர் விஸ்வநாதன் தலைமை வகித்தார். செயலாளர் கிருஷ்ணமூர்த்தி

மற்றும் மலர் சாகுபடியாளர்கள் கலந்து கொண்டனர்.முடிவில், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது.

**ஸ்ரீவில்லிபுத்தூரில் பதனீர் விற்பனை குறைந்தது : கருப்பட்டியை "ஸ்டாக்' செய்யும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 08,2011,01:14 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் பதனீர் விற்பனை குறைந்ததால், கருப்பட்டியை தயார் செய்த விவசாயிகள், விலை அதிகரிப்பை எதிர் நோக்கி இருப்பு வைத்து வருகின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே திருவண்ணாமலை, மம்சாபுரம், வத்திராயிருப்பு பகுதிகளில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன. இப்பனை மரங்களை நம்பி ஆயிரக்கணக்கான விவசாயிகள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

ஆனால், பனை விவசாயத்தில் போதிய வருமானம் கிடைக்காததால்,பலர் இத்தொழிலில் ஈடுபடாமல் வேறு தொழிலுக்கு சென்று விட்டனர். குறைவானவர்களே இதில் ஈடுபடுகின்றனர். ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிகளில் பதனீர் உற்பத்தி கடந்த ஜனவரி 15 முதல் துவங்கியது. இங்கு உற்பத்தியாகும் பதனீரை, பனை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தினர் வாங்கி பதப்படுத்தி ,மதுரை, விருதுநகர் உட்பட பல இடங்களிலும் விற்பனை செய்து வருகின்றனர். துவக்கத்தில் குறைவான பதனீரே கிடைத்த நிலையில், ஏப்ரலில் பெய்த மழையால் பதனீர் உற்பத்தி அதிகரித்தது. பதனீர் அனைத்தையும் கூட்டுறவு சங்கத்தினர் வாங்குவதில்லை. இதனால் விற்பனை செய்தது போக மீதமுள்ள பதனீரை கொண்டு கருப்பட்டி தயார் செய்தனர். ஒரே நேரத்தில் அதிகளவில் கருப்பட்டி உற்பத்தியானதால் , கிலோ 40 ரூபாய்க்கு தான் கொள்முதல் செய்யப்பட்டது.

இதனால் விவசாயிகள் பாதிப்படைந்தனர். இந்நிலையில், சாரல் மழை பெய்வதால் பதனீர் விற்பனையும் குறைந்துள்ளது. பதனீர் தேங்கியதால் மழை காலங்களில் விற்பதற்கு ஏதுவாக கருப்பட்டி தயார் செய்து இருப்பு வைத்து வருகின்றனர்.

விவசாயி அய்யனார் கூறியதாவது: தற்போது குறைவாகத்தான் பதனீர் உற்பத்தியாகிறது. விற்பனையும் குறைந்ததால் கருப்பட்டி தயார் செய்து ஸ்டாக் வைத்து வருகிறோம். அக்டோபர், நவம்பரில் நடக்கும் விழாக்களுக்கு கருப்பட்டி தேவை படும் என்பதால் கூடுதல் விலை கிடைக்கும், என்றார்.

**காய்கறி விதைகள் விற்பனைக்கு தயார்**

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2011,23:03 IST

விருத்தாசலம் : விருத்தாசலம் உழவர் சந்தையில் காய்கறி விதைகள் விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிமொழி விடுத்துள்ள செய்திக் குறிப்பு: விருத்தாசலம் உழவர் சந்தையில் ஆடிப்பட்டத்திற்கு தேவையான எட்டு வகை காய்கறி விதைகள் அடங்கிய விதை பொட்டலங்கள் தோட்டக்கலைத் துறை மூலம் விற்பனைக்கு தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஒரு விதைப் பொட்டலம் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தேவைப்படும் விருத்தாசல வட்டார விவசாயிகள் மற்றும் பொது மக்கள் உழவர் சந்தை அலுவலகத்தையோ அல்லது ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகத்தில் இயங்கி வரும் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவ லகத்தையோ தொடர்பு கொள்ளலாம் என தெரி வித்துள்ளார்.

---

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

***பருப்பு, காய்கறி விலை குறைவால் உணவு பொருள் பணவீக்கம் 7.61 சதவீதமாக குறைந்தது***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

புதுடெல்லி

உணவு பொருள் பணவீக்கம் ஜூன் 25–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் கடந்த ஏழு வாரங்களில் இல்லாத அளவிற்கு 7.61 சதவீதமாக குறைந்துள்ளது. பருப்பு வகைகள், காய்கறி, உருளைக்கிழங்கு விலை குறைந்துள்ளதே இதற்கு காரணமாகும்.

முந்தைய வாரத்தில்...

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் உணவு பொருள் பணவீக்கம் முந்தைய வாரத்தில் 7.78 சதவீதமாக இருந்தது. தொடர்ந்து இரண்டு வாரங்களாக இந்த பணவீக்கம் குறைந்து வருகிறது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், ஓர் ஆண்டு கால அடிப்படையில், பருப்பு வகைகள் விலை 9 சதவீதமும், காய்கறி விலை 8.74 சதவீதமும், உருளைக்கிழங்கு விலை 2.13 சதவீதமும் குறைந்துள்ளது.

அதேசமயம், பழங்கள் விலை 22.75 சதவீதமும், பால் விலை 12.10 சதவீதமும் உயர்ந்துள்ளது. வெங்காயம் விலை 21.24 சதவீதம் அதிகரித்துள்ளது. முட்டை, மீன், இறைச்சி உள்ளிட்ட அசைவ உணவு பொருள்கள் விலை 10.12 சதவீதமும், தானியங்கள் விலை 4.26 சதவீதமும் உயர்ந்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், உணவு பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 11.84 சதவீதத்திலிருந்து 11.56 சதவீதமாக குறைந்துள்ளது. உணவு சாரா பொருள்கள் பணவீக்கம் 17.91 சதவீதத்திலிருந்து 17.69 சதவீதமாக குறைந்துள்ளது.

எரிபொருள் பணவீக்கம் 12.98 சதவீதத்திலிருந்து 12.67 சதவீதமாக குறைந்துள்ளது.

மத்திய அரசு, சென்ற ஜூன் 24–ந் தேதி அன்று டீசல் விலையை லிட்டருக்கு 3 ரூபாயும், சமையல் எரிவாயு விலையை சிலிண்டர் ஒன்றுக்கு 50 ரூபாயும், மண்எண்ணெய் விலையை லிட்டருக்கு 2 ரூபாயும் உயர்த்தி உள்ளது.

இதன் தாக்கத்தை இனிவரும் வாரங்களில் உணரலாம் என பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்தார். சென்ற மே மாதத்தில், மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் 9.06 சதவீதமாக உயர்ந்துள்ளது. டீசல் விலை உயர்வு, நேரடியாக மட்டுமின்றி, மறைமுகமாகவும் பணவீக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஒட்டுமொத்தத்தில் இதனால் பொது பணவீக்கம் 1 சதவீதம் உயரும் என பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

தொழில்துறை உற்பத்தி

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதம் தொடர்ந்து உயர்த்தப்பட்டதையடுத்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும்

தொழில் துறை உற்பத்தி வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது. இந்நிலையில், உணவு பணவீக்கம் குறைந்து வருவது, மத்திய அரசுக்கும், பாரத ரிசர்வ் வங்கிக்கும் சற்று ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது.

## அன்னிய நேரடி முதலீட்டால் உணவு பதப்படுத்துதல் துறை எழுச்சி பெறும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

பல பிராண்டு சில்லரை வணிகத் துறையில் அன்னிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி அளிப்பதால் உணவுப் பதப்படுத்துதல் துறை எழுச்சி பெறும் என்று அசோசெம் அமைப்பு தெரிவித்துள்ளது. இத்துறையில் உற்பத்தி திறனை அதிகரிக்கவும், புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவும் வேண்டுமென்றால் பல்பொருள் சில்லரை வணிகத்தில் வெளிநாட்டு நிறுவனங்களின் நேரடி முதலீட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டில் தற்போது உணவுப் பதப்படுத்துதல் துறையினர் ஈட்டும் வருவாய் ரூ.5.45 லட்சம் கோடியாக உள்ளது. இது, அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ.8.73 லட்சம் கோடியாக உயரும் என அசோசெம் மதிப்பீடு செய்துள்ளது. எனினும் இத்துறை, பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் பின்தங்கிய நிலையில்தான் உள்ளது.

அமெரிக்காவின் மொத்த வேளாண் உற்பத்தியில் 53 சதவீதம் பதப்படுத்தப்பட்டு விடுகிறது. இது, நியூசிலாந்தில் 42 சதவீதமாக உள்ளது. இந்தியாவிலோ, வேளாண் விளைபொருள்களில் 7 சதவீதம் மட்டுமே பதப்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் மொத்த உற்பத்தியில் உணவு பதப்படுத்துதல் துறையின் பங்களிப்பு 9 சதவீதமாக உள்ளது. தொழில்துறை உற்பத்தியில் இதன் பங்கு 14 சதவீதமாக உள்ளது. இத்துறையில் 16 லட்சம் தொழிலாளர்கள் நேரடி வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

தினகரன்

# 7 வாரத்துக்கு முந்தைய நிலை காய்கறி விலை குறைவால் உணவு பணவீக்கம் சரிவு

பதிவு செய்த நாள் 7/8/2011 2:9:1



புதுடெல்லி, : கடந்த ஜ“ன் 25ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் 7.61 சதவீதமாக குறைந்துள்ளது. காய்கறிகள் விலை குறைந்ததே இதற்கு முக்கிய காரணம். கடந்த ஆண்டு ஜ“ன் 2010ல் 20 சதவீதத்துக்கு மேல் இருந்தது. பின்னர் படிப்படியாக குறைந்து கடந்த மே மாதம் 7ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் 7.47 சதவீதமாக குறைந்தது. கடந்த 7 வாரங்களாக மீண்டும் உயர்ந்து வந்த உணவு பண வீக்கம், கடந்த ஜ“ன் 18ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் 7.78 சதவீதமாகக் குறைந்தது. 25ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் மேலும் குறைந்து 7.61 சதவீதமாகி உள்ளது. மே மாதத்தில் ஒட்டுமொத்த பணவீக்கம் 9.06 சதவீதமாக இருந்தது. காய்கறிகள், தானியங்கள் விலை குறைந்ததே உணவு பணவீக்கம் சரிந்ததற்கு முக்கிய காரணம். அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி, தானியங்கள் விலை 9 சதவீதமும், காய்கறிகள் விலை 8.74 சதவீதமும் உருளைக்கிழங்கு விலை 2.13 சதவீதமும் குறைந்துள்ளது.எனினும் மற்ற உணவுப் பொருட்கள் விலை உயர்ந்துள்ளது. பழங்கள் 22.75 சதவீதமும், வெங்காயம் 21.24 சதவீதமும், முட்டை, இறைச்சி, மீன் விலை 10.12 சதவீதமும் பால் 12.10 சதவீதமும் உயர்ந்துள்ளது. டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு விலை அண்மையில் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், இனி வரும் காலங்களில் உணவு பணவீக்கம் மீண்டும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக இத்துறை சார்ந்தவர்கள் கூறியுள்ளனர்.